TAPPAL
13 MAY 1997
CHENNAI

048479

தமிழ் நாடு அரசு

<u>சுருக்கம்</u>

கல்வித் தகுதி – பொதுப்பணிகளில் நியமனம் செய்ய மட்கல தொழில் நுட்ப நிறுவனத்தால் வழங்கப்படும் மட்கல தொழில் நுட்ப பட்டயத்தை ( Diploma in Ceramic Technology ) அங்கீகாரம் செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - -

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஆர்) துறை

அரசு ஆணை நிலை எண். 119 நாள் 7,5,1997

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை நிலை எண் 441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஆர்) துறை, நாள் 20.12.1993.
2. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரின் கடித எண் 6190/டிஜி3/93, நாள் 20.12.1994 மற்றும் 10.4.1995.
3. [illegible]

<u>ஆணை</u> :

மட்கல தொழில் நுட்ப நிறுவனத்தால் வழங்கப்படும் மட்கல தொழில் நுட்பப் பட்டயத்தைத் ( Diploma in Ceramic Technology) தொழில் ஆய்வாளர் ( Inspector of Industries ) மற்றும் தொழில் துறையின் இளநிலைப் பொறியாளர் ஆகிய பணி நியமனங்களுக்கு உரிய கல்வித் தகுதியாக எடுத்துக்கொள்ளுமாறு விருத்தாசலத்திலுள்ள மட்கல தொழில் நுட்ப நிறுவனத்தின் மாணவத் தலைவர் தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவிடம் கேட்டுள்ளார்.

2. மட்கல தொழில் நுட்ப நிறுவனத்தின் மாணவத் தலைவரது கோரிக்கை இதற்கென அரசு ஆணை நிலை எண் 441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஆர்) துறை, நாள் 20.12.93-ன் மூலம் தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் அமைக்கப்பட்ட குழுவின் ( Committee ) முன்னர் பரிசீலனைக்காக வைக்கப்பட்டது.

3, தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு அலுவலகத்தில் 15.7.1994 அன்று நடந்த குழுவின் கூட்டத்தில் மட்கல தொழில் நுட்ப நிறுவனத்தால் வழங்கப்படும் மட்கல தொழில் நுட்பப் பட்டயத்தை ( Diploma in Ceramic Technology ) பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்காக அங்கீகரிக்கலாம் என குழு தீர்மானித்து அரசுக்கும் பரிந்துரை செய்துள்ளது.

தொடர்ச்சி..2

(P.T.O)

4. குழுவின் பரிந்துரைகளை அரசு தீவிர பரிசீலனைச் செய்து ஏற்றுக்கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. அவ்வாறே அரசு, விருத்தாசலம் மட்கல தொழில் நுட்ப நிறுவனத்தால் வழங்கப்படும் மட்கல தொழில் நுட்பப் பட்டயத்தைப் ( Diploma in Ceramic Technology) பொதுப் பணிகளின் வேலை வாய்ப்பிற்காக அங்கீகரிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.பாஸ்கரதாஸ்,
அரசு செயலாளர்.

பெறுநர்

அனைத்துச் செயலர்கள், தலைமைச் செயலகத் துறை, சென்னை-9.
அனைத்துத் துறை தலைமை அலுவலர்கள்,
முதல்வர், மட்கல தொழில் நுட்ப நிறுவனம், விருத்தாசலம்
செயலர், தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை-2.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
அனைத்துப் பிரிவுகள், பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை-32

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

ON

Trfd. to R.N.D 'A' Section
14.5.97

vide Govt lr. no 50852/R/97-3, P&AR (R) Dept. dt. 5.8.98.